# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
# Tamilnadu Government Employees' Association
(பதிவு எண்: 237/84)

**தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்**

எண்.46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005

28441286 / 28440938 / 28443601 e-mail: tngeastatecenter@gmail.com / web: www.tngea.org



மாநிலத் தலைவர்
**மு.அன்பரசு**

பொதுச் செயலாளர்
**ஆ.செல்வம்**

மாநில துணைத் தலைவர்கள்
**மொ.ஞானத்தம்பி**
**ஆ.பெரியசாமி**
**கோ.பழனியம்மாள்**
**சி.எஸ்.கிறிஸ்டோபர்**
**சி.பரமேஸ்வரி**
**மு.செல்வராணி**

மாநிலப் பொருளாளர்
**மு.பாஸ்கரன்**

துணை பொதுச்செயலாளர்கள்
**இரா.மங்களபாண்டியன்**
**என்.வெங்கடேசன்**
**மு.சீனிவாசன்**
**தெ.வாசுகி**

மாநிலச் செயலாளர்கள்
**சா.டானியல் ஜெயசிங்**
**உ.சுமதி**
**ச.ஹேமலதா**
**ஆ.அம்சராஜ்**
**சா.கோதண்டபாணி**
**அ.குபேரன்**


கடித எண்.4/2023 நாள்.15.03.2023

பெறுநர்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்**
தலைமைச் செயலகம்
சென்னை-600009

ஐயா,

வணக்கம்.

பொருள் : அரசு மருத்துவர்களுக்கு - அரசு ஆணை 354ஐ நடைமுறைப்படுத்தி ஊதிய உயர்வு வழங்கிட வேண்டுதல் - குறித்து

*****

இந்தியாவில் கொரோனா பெருந்தொற்று ஏற்பட்டபோது அந்த பெருந்தொற்றிலிருந்து மக்களை பாதுகாப்பதில் தமிழகம் சிறப்பாக செயல்பட்டது. அதுமட்டுமல்ல. இறப்பு விகிதம் குறைவு. மூன்றாவது அலையில் தமிழ்நாடு அரசு எடுத்துள்ள அனைத்து நடவடிக்கைகளும் பாராட்டுதலுக்குரியது என ஆங்கில பத்திரிக்கை உள்ளிட்ட அனைத்து பத்திரிக்கைகளும் எழுதியுள்ளது அனைவரும் அறிந்ததே. அந்த அளவுக்கு தங்கள் தலைமையிலான அரசு செயல்பட்டது. அதற்கு பிரதான காரணமாக இருந்தவர்கள் மருத்துவத்துறையை சார்ந்த அனைத்து ஊழியர்களின் தன்னலமற்ற பணிதான். அதில் குறிப்பாக அரசு மருத்துவர்களின் பணி குறிப்பிடத்தக்கதாக இருந்தது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளிலும், தொலைக்காட்சிகளிலும் பாராட்டி பேசியுள்ளீர்கள் என்பதை தங்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு வருகிறோம்.

இந்த பின்புலத்தில் அரசு மருத்துவர்கள் கடந்த 12 ஆண்டு காலமாக உள்ள கோரிக்கையான முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் போடப்பட்ட அரசு ஆணை 354ஐ அமல்படுத்திட வேண்டும் என தொடர்ச்சியான போராட்டங்கள் நடத்தி பல்வேறு விதமான பழிவாங்கும் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்ட பிறகும் தங்களது நியாயமான கோரிக்கையை நிறைவேற்றிட ஜனநாயகப்பூர்வமான போராட்டத்தை நடத்தி வருகிறார்கள்.

இந்நிலையில் திமுக அரசு பதவி ஏற்றவுடன் தங்களது கோரிக்கைகளை நிறைவேற்றப்படும் என எதிர்பார்த்த நிலையில் கோரிக்கை நிறைவேறாத பட்சத்தில் மாண்புமிகு மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களை நேரடியாக சந்தித்து பலமுறை முறையீடுகள் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை.

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601


மேலும் தங்களது கோரிக்கைகயை நிறைவேற்ற வலியுறுத்தி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கும் போராட்டங்கள் நடத்தியபோது போராட்டம் நடத்துகின்ற சங்க நிர்வாகிகள் மீது பழி வாங்கும் நோக்கத்துடன் மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத்துறை நிர்வாகத்தால் 17பி குற்றக் குறிப்பாணைகள் கொடுக்கப்பட்டதாக தெரிகிறது. இந்த நடவடிக்கை மருத்துவத்துறையில் பணிபுரியும் ஊழியர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அது மட்டும் அல்ல. கொரோனா பாதிப்பு ஏற்பட்டு இறந்த மருத்துவர்கள் குடும்பத்திற்கு தகுதிக்கு ஏற்ப கருணை அடிப்படை வேலையும் இதுவரை வழங்கப்படவில்லை (உதாரணம் மருத்துவர் திரு. விவேகானந்தன்) என்பதை தங்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம்.

எனவே தமிழ்நாடு அரசின் மக்களைத் தேடி மருத்துவம், நம்மை காக்கும் 48 என்ற மகத்தான திட்டம் உள்ளிட்ட மருத்துவம் சார்ந்த அனைத்து மக்கள் நலன் திட்டங்களையும் அர்பபணிப்பு உணர்வுடன் கொண்டு சேர்க்கும் அளப்பறிய பணியை செய்து வரும் 19 ஆயிரம் அரசு மருத்துவர்களின் நியாயமான கோரிக்கையான அரசு ஆணை 354ஐ அமல்படுத்தி மருத்துவர்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றிட வேண்டுமாய் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை கனிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்மதிப்புடன்,
தங்கள் நம்பிக்கையுள்ள,

**(மு. அன்பரசு)**
மாநிலத் தலைவர்
செல்.9840187508

**(ஆ. செல்வம்)**
பொதுச் செயலாளர்
செல்.9443930500

நகல்

1) **மாண்புமிகு அமைச்சர் அவர்கள்**
மருத்துவம்-மக்கள் நல்வாழ்வுத்துறை
தலைமைச் செயலகம், சென்னை-600009

2) **அரசு முதன்மைச் செயலாளர்**
மருத்துவம்-மக்கள் நல்வாழ்வுத்துறை
தலைமைச் செயலகம், சென்னை-600 009

3) **அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**
நிதித்துறை
தலைமைச் செயலகம், சென்னை-600 009